Crl.Misc.39

DEPOSITION OF WITNESS

IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE COURT, ANNUR.

Case No. C.C.No. 106 / 2024

Deposition of witness for Prosecution – P.W.6 Date : 08.04.2026

| Name : | கருப்புசாமி | Village : | கூகலூர் |
|---|---|---|---|
| Father's Name : | முத்துசாமி | Taluk : | கோபிச்செட்டிபாளையம் |
| Age : | 54 | District : | ஈரோடு |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 08[th] day of April 2026

**(Accused Present)**

**சாட்சி அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு முதல் விசாரணை**

நான் தற்போது அன்னூர் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இந்த வழக்கினை விரைந்து முடிக்க வேண்டி அரசு தரப்பு கூடுதல் சாட்சியாக மனுவின் அடிப்படையில் காவல் நிலைய வழக்கு கோப்பின் அடிப்படையில் இன்று சாட்சியமளிக்கிறேன். இந்த வழக்கில் கடந்த 11.01.2024 ம் தேதி காவல் நிலையம் வந்து புகார்தாரர் ஆனந்தன் என்பவர் எழுத்து மூலமான புகாரினை பெற்று நிலைய குற்ற எண்.28/2024 இ.த.ச. பிரிவுகள் 279, 304(A) ஆகியவற்றின் கீழ் தலைமை காவலர் சுரேஷ் என்பவர் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். (**அந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது**) இந்த வழக்கினை புலன் விசாரணைக்கு எடுத்துக் கொண்ட ஆய்வாளர் நித்யா அன்றைய தினமே சம்பவ இடம் சென்று சாட்சிகள் சரவணன் மற்றும் ரமேஷ்குமார் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தினை பார்வையிட்டு வரைபடம் வரைந்து பார்வை மகஜர் தயார் செய்யப்பட்டுள்ளது. (**அந்த பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் முறையே அ.சா.ஆ.5 மற்றும் அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது**) பின்னர் இவ்வழக்கின் சம்பவத்தில் இறந்துபோன சாலமன்ராஜா உடலை சாட்சிகள் முன்னிலையில் மேட்டுப்பாளையம் அரசு மருத்துவமனையில் வைத்து பிரேத விசாரணை செய்யப்பட்டுள்ளது. (**அந்த பிரேத விசாரணை அறிக்கை அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது**) பட்டியல் சாட்சிகள் 1 முதல் 8 வரையிலானவர்களை விசாரித்து அவர்களது வாக்குமூலங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்த விபத்தில் தொடர்புடைய இருசக்கர வாகனம் மற்றும் லோடு வேன் ஆகியவற்றை மோட்டார் வாகன ஆய்விற்கு உட்படுத்தப்பட்டு மோட்டார் வாகன ஆய்வறிக்கைகள் பெற்று ஆய்வாளரின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டுள்ளது, (**அந்த மோட்டார் வாகன ஆய்வறிக்கைகள் அ.சா.ஆ.8 மற்றும் 9 ஆக குறியீடு செய்யப்படுகிறது**) இந்த வழக்கு விபத்தில் இறந்து போன சாலமன் ராஜா உடலினை உடற்கூராய்வு செய்த மருத்துவர் திரு. சபரி என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து உடற்கூராய்வு சான்று பெறப்பட்டுள்ளது. (**அந்த உடற்கூராய்வு சான்று அ.சா.ஆ. 10 ஆக பதிவு செய்யப்படுகிறது**) பின்னர் இவ்வழக்கின் புலன் விசாரணையினை முடித்து காவல் ஆய்வாளர் நித்யா எதிரிக்கு எதிராக இதச பிரிவுகள் 279, 304-A இன் கீழ் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

இந்த வழக்கின் சாட்சிகள் அனைவரும் இறந்துபோன நபரின் பெற்றோர் மற்றும் உறவினர்கள் என்றும் சம்பவ இடத்தில் இருந்த கண்ணுற்ற சாட்சிகள் யாரையும்

விசாரணை செய்திடவில்லை என்றால் தவறு. பார்வை மகஜர் சாட்சிகளிடம் எந்த விபரம் தெரிவிக்காமல் கையொப்பம் பெறப்பட்டுள்ளது என்றால் தவறு. இவ்வழக்கின் புகார் மீது சரிவர விசாரணை செய்திடவில்லை என்றும், இவ்வழக்கின் ஆவணங்கள் முறையாக தயார் செய்யாமல் இந்த வழக்கில் எதிரிக்கு எதிராக தவறாக குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் தவறு. எதிரியின் அதிவேகம் மற்றும் கவனக்குறைவால் இந்த விபத்து நடைபெறவில்லை என்று சொன்னால் தவறு.

Take down by me/before me in open Court, interpreted/read over to the Witness and admitted by the deponent to be correct.

S/d.V.Monika
District Munsif Cum Judicial Magistrate
Annur